Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 604/2025 PW-3**

Name : கணபதி

Father / Husband name : ருத்திரமூர்த்தி

Village : வெள்ளிமேடுபேட்டை

Age : 53

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 15.04.2026

Accused Absent. Petition u/s 355 BNSS filed and allowed. Both side counsel present. Witness identified by HC 1967 Selvam.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது வெள்ளிமேடுபேட்டை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 26.06.2025 ம் தேதி அதிகாலை 2 மணியளவில் வெள்ளிமேடுபேட்டை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது நானும் காவல் உதவி ஆய்வாளர் மூர்த்தி மற்றும் 499 ஆனந்தன் ஆகியோர்கள் வைரபுரம் பெட்ரோல் பங்க் அருகே சென்றபோது TN 20 AL 2997 என்ற டிப்பர் லாரியில் சுமார் 1 யூனிட் கிராவல் மண் எடுத்துக்கொண்டு சென்றபோது நாங்கள் மடக்கி சோதனை செய்தபோது அந்த லாரியின் ஓட்டுநர் ராஜ்குமார் என்பவர் தப்பித்து ஓடியவரை நாங்க்ள மடக்கி பிடித்தோம். நான் மேற்படி லாரியை சோதனை செய்தபோது சுமார் 1 யூனிட் அளவுள்ள கிராவல் மண் இருந்தது. மணல் எடுத்துச்செல்ல அனுமதியில்லாததால் எதிரி ராஜ்குமாரை காரணம் கூறி கைது செய்து அந்நிய சாட்சிகள் இல்லாததால் காவலர் சாட்சிகள் முன்னிலையில் தடயப்பொருட்களை கைப்பற்றினார்கள். பின்னர் எதிரி மற்றும் தடயத்துடன் நிலையம் வந்து நிலையக்குற்ற எண் 91/2025, U/s 303(2), 326 (a) BNS ன் கீழ் உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். எதிரி ராஜ்குமாரை பார்த்தால் அடையாளம் காட்டுவேன் ( எதிரி இன்று ஆஜர் இல்லை, ( எதிரி இன்று ஆஜர் இல்லை 355 BNSS மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரியின் அடையாளம் குறித்து மட்டும்

ஆட்சேபனை இல்லை என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது ) தற்போது என்னிடம் காட்டப்படும் 4 புகைப்படங்களிலுள்ள டிப்பர் லாரியை உதவி ஆய்வாளர் கைப்பற்றினார். **அந்த 4 புகைப்படங்கள் அ.சா.பொ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

பொதுவாக புகாரை பெற்று தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு இந்த வழக்கில் புகார் எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்தயிடத்தை பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேமா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கையை நான் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் என்முன்பாக வாங்கவில்லை என்றால் சரிதான். எனது உயர் அதிகாரி கேட்டுக்கெண்டதால் பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியை மடக்கி பிடித்த இடத்தில் நாங்கள் செல்போன் பயன்படுத்த இயலும் என்றால் சரிதான். வைரபுரம் ஏரியில் எந்தயிடத்தில் மண் திருடப்பட்டது என்று புகைப்படம் எடுத்தோமா என்றால் இல்லை. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை, எதிரியின் ஓட்டுநர் லாரியை எடுத்துக்கொண்டு மணலை சீர் செய்தபோது புள்ளிவிவரக் கணக்கிற்காக இந்த பொய்யான வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரியை சம்பவயிடத்தில் கைது செய்யவில்லை, வீட்டில் வைத்து கைது செய்தோம் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் எதிரியிடம் வாங்கியிருந்தால் அதில் குற்ற எண் குறித்து சொல்லியிருப்போம் என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 604/2025 PW-4**

Name : ஆனந்தன்
Father / Husband name : சின்னதம்பி
Village : ரோசனை
Age : 48

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 15.04.2026

Accused Absent. Petition u/s 355 BNSS filed and allowed. Both side counsel present. Witness identified by HC 1967 Selvam.

<u>**முதல் விசாரணை**</u>

நான் தற்போது ரோசனை காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 26.06.2025 ம் தேதி அதிகாலை 2 மணியளவில் வெள்ளிமேடுபேட்டை காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணியிலிருந்தபோது உதவி ஆய்வாளருக்கு கிடைத்த இரகசிய தகவலின்படி நானும் காவல் உதவி ஆய்வாளர் முரளி மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளர் கணபதி ஆகியோர்கள் வெள்ளிமேடுபேட்டை எல்லைக்குட்பட்ட வைரபுரம் பெட்ரோல் பங்க் அருகே சென்று கண்காணித்து சென்றபோது வைரபுரம் - ஒரத்தி மெயின்ரோட்டில் TN 20 AL 2997 என்ற பதிவு எண் கொண்ட பெரியாண்டவர் என்று எழுதிருந்த டிப்பர் லாரி வந்தது. நான் அந்த வாகனத்தை மடக்கியபோது அதன் ஓட்டுநர் எங்களை கண்டவுடன் இறங்கி ஓட முயன்றவரை மடக்கிபிடித்து விசாரணை செய்தபோது அவர் பெயர் ராஜ்குமார், பெருமாள்பேட்டை கிராமத்தை சேர்ந்தவர் என்றும், வைரபுரம் ஏரியில் அரசு அனுமதியின்றி கிராவல் மண் எடுத்துவந்ததாக கூறினார். அந்த லாரியில் சுமார் 1 யூனிட் கிராவல் மண் இருந்தது. அவரை உதவி ஆய்வாளர் கைது செய்து சாட்சி காளி மற்றும் சதீஷ் முன்னிலையில் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தும், அதே சாட்சிகள் முன்னிலையில் வாகனத்தை கைப்பற்றுதல்

மகசரின் மூலம் பறிமுதல் செய்தார். அதிகாலை 4 மணியளவில் எதிரி மற்றும் தடயத்துடன் நிலையம் வந்து நிலையக்குற்ற எண் 91/2025, U/s 303(2), 326 (a) BNS ன் கீழ் உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். நான் அவருக்கு உதவியாக இருந்தேன். எதிரி ராஜ்குமாரை பார்த்தால் அடையாளம் காட்டுவேன் ( எதிரி இன்று ஆஜர் இல்லை, ( எதிரி இன்று ஆஜர் இல்லை 355 BNSS மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரியின் அடையாளம் குறித்து மட்டும் ஆட்சேபனை இல்லை என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது ) தற்போது என்னிடம் காட்டப்படும் அ.சா.பொ.1 நான்கு புகைப்படங்களிலுள்ள டிப்பர் லாரியை உதவி ஆய்வாளர் கைப்பற்றினார். வழக்கு சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான் இது சுமோட்டோ வழக்கு. சம்பவம் நடந்தயிடத்தை பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேமா என்றால் இல்லை. எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் என்முன்பாக வாங்கவில்லை என்றால் சரிதான், சாட்சி காளி, சதீஷ் முன்னிலையில் வாங்கினார்கள். இரகசிய தகவல் எனக்கு வரவில்லை, உதவி ஆய்வாளருக்கு வந்தது என்றால் சரிதான். வைரபுரம் ஏரியில் எந்தயிடத்தில் மண் திருடப்பட்டது என்று புகைப்படம் எடுத்தோமா என்றால் நான் எடுக்கவில்லை, உதவி ஆய்வாளர் எடுத்திருப்பார். வாகனத்தின் ஓட்டுநர் மணலை சீர் செய்தபோது வாகனத்தை பிடித்து அதன் உரிமையாளர் எதிரியை வீட்டில் வைத்து கைது செய்தார் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது.**

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.